OL/2019/63-T-I, II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**63 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2019**

ව්‍යවසායකත්ව අධ්‍යයනය I, II
முயற்சியாண்மைக் கற்கை I, II
Entrepreneurship Studies I, II

**12.12.2019 / 0830 - 1140**

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## முயற்சியாண்மைக் கற்கை I

**கவனிக்க :**

- ✳ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✳ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
- ✳ **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
- ✳ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** வெற்றிகரமான முயற்சியாளராகத் திகழும் சிவகுமார், தனது சிறுபராயத்திலிருந்தே புதிய விடயங்களைச் செய்வதற்கு தான் எப்பொழுதும் முயன்றதாகக் கூறுகின்றார். இதன் மூலம் குறிப்பிடப்படும் முயற்சியாண்மைப் பண்பானது
(1) அர்ப்பணிப்பு (2) நெகிழ்வுத் தன்மை
(3) நட்ட இடரை ஏற்றல் (4) ஆக்கபூர்வத் தன்மை

**2.** பிரபல வணிகரான சந்திரபாலன் வருடாந்தம் சிறுவர் இல்லமொன்றின் சிறார்களுக்காக கல்விச் சுற்றுலாவொன்றை ஏற்பாடு செய்வார். இதனடிப்படையில் முயற்சியாளரான அவர்
(1) பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்கின்றார்.
(2) தனது வணிகத்தைப் பிரபல்யப்படுத்துகின்றார்.
(3) சமூகநல மேம்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்கின்றார்.
(4) சமூக அங்கீகாரத்தினை உருவாக்குகின்றார்.

**3.** மனிதத் தேவைகளையும் விருப்பங்களையும் திருப்திப்படுத்துவதற்கான எந்தவொரு பொருளாதார நடவடிக்கையும் பொதுவாக வரையறுக்கப்படுவது
(1) சந்தை என்றாகும். (2) போட்டியாளர் என்றாகும்.
(3) வணிகம் என்றாகும். (4) கைத்தொழில் என்றாகும்.

**4.** 'புத்தாக்கத்தினை' ஊக்குவிக்கும் காரணியாக அமைவது
(1) தோல்விகளை அனுபவமாகக் கருதுதல் ஆகும்.
(2) சமூக நடைமுறைகளுக்கும் மரபுகளுக்கும் ஏற்ற விதத்தில் செயற்படல் ஆகும்.
(3) ஆக்கபூர்வமான கருத்துகளை உடனடியாக நடைமுறைப்படுத்துதல் ஆகும்.
(4) சகல பிரச்சினைகளுக்கும் ஒரு தீர்வினை மாத்திரமே கண்டறிதல் ஆகும்.

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

5. ஸ்ரீதரனின் வணிகம் தோல்வியுற்றதனால் அவரது வங்கிக்கடனைச் செலுத்துவதற்காக அவரது சொந்த வீட்டினை ஏலவிற்பனை செய்து பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நீதிமன்ற உத்தரவொன்று பிறப்பிக்கப்பட்டமைக்குக் காரணமாக அமைவது
   (1) வணிகத்தின் கடன் தொகைக்கு ஸ்ரீதரன் பொறுப்புடையவராதலாகும்.
   (2) நாட்டின் சிவில் சட்டம் வணிகத்திற்கும் ஏற்புடையதாதலாகும்.
   (3) வணிகத்திற்குச் சட்ட ஆளுமை இல்லாதிருத்தலாகும்.
   (4) வங்கிகளைப் பாதுகாப்பது அரசின் கடமையாகக் காணப்படுகின்றமையாகும்.

6. பண்டைய வணிகச் சூழலுடன் ஒப்பிடுகையில் நடைமுறை வணிகச் சூழலில் காணக்கூடிய பிரதான வேறுபாடு
   (1) விருப்பங்கள் எளிமையானவையாய் இருத்தல், முகாமையாளர்கள் அதிகாரம் பெற்றிருத்தல், நுகர்வோர் அதிகாரம் பெற்றிராமை
   (2) விருப்பங்கள் சிக்கல் வாய்ந்தவையாய் இருத்தல், போட்டித்தன்மை அதிகரித்தல், நுகர்வோர் அதிகாரம் பெற்றிருத்தல்
   (3) விருப்பங்கள் சிக்கல் வாய்ந்தவையாய் இருத்தல், உற்பத்திகள் எளிமையானவையாய் இருத்தல், இலாபத்திற்கு முன்னுரிமையளித்தல்
   (4) விருப்பங்கள் எளிமையானவையாய் இருத்தல், வணிகத்தின் பலம் அதிகரித்தல், இலாபத்திற்கு முன்னுரிமையளித்தல்

7. சிற்றளவு வணிகங்களில் **காணக்கிடைக்காத** பண்பு
   (1) நவீன தொழினுட்பத்தை எளிதாகப் பயன்படுத்தக்கூடியதாயிருத்தல்
   (2) ஊழியர்களைப் பணிக்கமர்த்துதலும் பயிற்சி வழங்குதலும் இலகுவாயிருத்தல்
   (3) சிறியளவிலான மூலதனத்தினைக் கொண்டேனும் வணிகத்தினை ஆரம்பிக்கக்கூடியதாயிருத்தல்
   (4) வணிகக் கருமங்களுக்குக் குடும்ப உறுப்பினர்களின் பங்களிப்பைப் பெறக்கூடியதாயிருத்தல்

8. முயற்சியாளரொருவர் சூழல் ஆய்வின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மை
   (1) வணிகத்திற்கு வாடிக்கையாளர்களைக் கவர்ந்துகொள்ள முடியுமாயிருத்தல்
   (2) திறன்மிக்க ஊழியர்களை வணிகத்திற்குப் பெற்றுக்கொள்ள முடியுமாயிருத்தல்
   (3) வணிகத்தின் முகாமைத்துவக் கருமங்களை இலகுவாகச் செய்ய முடியுமாயிருத்தல்
   (4) சூழல் மாற்றங்களுக்கேற்ப திட்டங்கள், தந்திரோபாயங்களைத் தயாரிக்க முடியுமாயிருத்தல்

9. வணிகத்தின் அகச்சூழலில் இயங்கும் முக்கிய காரணி
   (1) வாடிக்கையாளர்கள்
   (2) மூலப்பொருள் வழங்குனர்கள்
   (3) பௌதீக வளங்கள்
   (4) போட்டியாளர்கள்

10. முயற்சியாளரின் வகிபாகத்தில் 'உரிமையாளர்' எனும் வகிபாகத்தின் செயற்பாடாக அமைவது
   (1) வணிக நடவடிக்கைகளைத் திட்டமிடல்
   (2) வணிகத்திற்குத் தேவையான வளங்களை வழங்குதல்
   (3) ஊழியர்களை ஊக்குவித்தலும் தேவையான வழிகாட்டல்களை வழங்குதலும்
   (4) மனித வளங்களை வணிகத்தின் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல்

11. தற்காலத்தில் பெண்கள் முயற்சியாண்மையில் ஈடுபடுதல் அவசியமாவது
   (1) வணிகங்களின் அபிவிருத்திக்குப் பங்களிப்பு வழங்குவதனாலாகும்.
   (2) பெண்களின் பங்களிப்பு அவசியமான வணிகங்கள் காணப்படுவதனாலாகும்.
   (3) கடன் பெற்றுக்கொள்வது இலகுவானது என்பதனாலாகும்.
   (4) வெற்றிகரமான முயற்சியாளரென விருதுகளைப் பெறுதல் இலகுவானது என்பதனாலாகும்.

12. வணிகத்தினை முழுமையாகக் கருதி, எதிர்காலத்தில் வணிகத்தை வெற்றியடையச்செய்யத்தக்க தீர்மானங்களை மேற்கொள்ளல், அவற்றை மேம்படுத்துதல், தேவையான தந்திரோபாயங்களைத் தீர்மானித்து நடைமுறைப்படுத்துதல் என்பன தொடர்பில் முயற்சியாளருக்குள்ள திறனானது
   (1) ஆலோசனைத் திறன் எனப்படும்.
   (2) எண்ணக்கருரீதியிலான திறன் எனப்படும்.
   (3) மானிடத் திறன் எனப்படும்.
   (4) தொடர்பாடல் திறன் எனப்படும்.

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**13.** வணிகமொன்று விளையாட்டுக் கழகமொன்றிற்குத் தேவையான உபகரணங்களை வழங்கியது. இதன் மூலம் நிறைவேற்றப்படுவது
(1) பொருளாதாரப் பொறுப்பாகும். (2) சட்டரீதியான பொறுப்பாகும்.
(3) பண்பாட்டுப் பொறுப்பாகும். (4) பொதுநல விருப்புடைய பொறுப்பாகும்.

**14.** வணிகமொன்றின் போட்டியாளர்களினால் அதன் தந்திரோபாயங்கள் மாற்றியமைக்கப்படும். வணிகம் தொடர்பில் இந்த நடவடிக்கையானது எவ்வாறு கருதப்படும்?
(1) சவாலாக ஆகும். (2) வாய்ப்பாக ஆகும்.
(3) பலமாக ஆகும். (4) பதிலீடாக ஆகும்.

**15.** தற்காலத்தில் உலக நாடுகள் தமது தேச எல்லைகளைத் தாண்டி ஒன்றாகச் செயற்படும் போக்கினைக் காணக்கூடியதாய் உள்ளது. இத்தகைய போக்கு தொடர்புறுவது
(1) பொருளாதாரச் சூழலுடனாகும். (2) சமூகச் சூழலுடனாகும்.
(3) போட்டிச் சூழலுடனாகும். (4) பூகோளச் சூழலுடனாகும்.

**16.** வணிக ஒழுக்கங்கள்
(1) வணிகத்தில் அக்கறையுடைய தரப்பினரின் பொறுப்பாகும்.
(2) வணிக நிறுவனத்தின் நிதிசார், கொள்கைசார் பொறுப்பாகும்.
(3) வணிக உரிமையாளரின் பொறுப்பாகும்.
(4) நிலைபேறான வணிக அமைப்பின் பொறுப்பாகும்.

**17.** வணிகத்தின் நிர்வாகக் கட்டமைப்பு, உரிமையாண்மை, இயக்குநர் குழு தொடர்பான தகவல்கள் உள்ளடங்கியிருப்பது
(1) நிறுவனத் திட்டத்திலாகும். (2) நிர்வாகத் திட்டத்திலாகும்.
(3) நிறைவேற்றுத் திட்டத்திலாகும். (4) நிதித் திட்டத்திலாகும்.

**18.** வணிக நடவடிக்கைகளில் தாக்கம் செலுத்தும் சகல காரணிகளினதும் சேர்க்கையானது
(1) வணிகச் சூழல் எனப்படும். (2) அகச் சூழல் எனப்படும்.
(3) சமூகச் சூழல் எனப்படும். (4) புறச் சூழல் எனப்படும்.

**19.** வணிக அமைப்பொன்றின் பொதுவான பண்பு
(1) இலாபமீட்டுதல்
(2) வணிகத்தினை முகாமைத்துவம் செய்தல்
(3) பொதுவான நோக்கத்தினைக் கொண்டிருத்தல்
(4) பொருட்களை உற்பத்தி செய்தல்

**20.** வணிகமொன்றின் முகாமையாளரான அதீபன் அண்மையில் புதிய உற்பத்தியொன்றைச் சந்தைக்கு அறிமுகப்படுத்தினார். எனவே அவர்
(1) வணிக முயற்சியாளராவார். (2) சமூக முயற்சியாளராவார்.
(3) நிறுவனரீதியான முயற்சியாளராவார். (4) உற்பத்தி முயற்சியாளராவார்.

**21.** புறச்சூழல் காரணிகளை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) தொழினுட்பம், சந்தை, வட்டிவீதம்
(2) வணிகத்தின் அமைவிடம், தேசிய பொருளாதாரம், நிர்வாகக் கட்டமைப்பு
(3) சர்வதேச சந்தை, அரசியல் நிலைத்தன்மை, நிர்வாகக் கட்டமைப்பு
(4) தொடர்பாடல், உபாயங்கள், நிர்வாகக் கட்டமைப்பு

**22.** தனியொருவர் அல்லது சிலர் இணைந்து ஆரம்பிக்கக்கூடிய சட்ட ஆளுமையும் நீடித்துழைக்கும் தன்மையையும் கொண்ட வணிக அமைப்பு வகை
(1) பங்குடைமை வணிகமாகும். (2) தனியுடைமை வணிகமாகும்.
(3) அங்கீகார வணிகமாகும். (4) கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாகும்.

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka

**23.** திட்டங்களைத் தயாரித்தலும் வளங்களை ஈடுபடுத்தலும் உரித்தாவது
(1) உரிமையாளரின் வகிபாகத்திற்காகும். (2) தலைவரின் வகிபாகத்திற்காகும்.
(3) முகாமையாளரின் வகிபாகத்திற்காகும். (4) ஆலோசகரின் வகிபாகத்திற்காகும்.

**24.** விரிவான வணிகத் திட்டத்தின் மூலம் எடுத்துக்காட்டப்படுவது
(1) முதலீட்டாளர்களின் முதலீட்டுத் தீர்மானங்களாகும்.
(2) நிதித் தகவல்கள், உற்பத்தித் தகவல்கள், வணிகக் கொள்கைகள் ஆகியனவாகும்.
(3) உரிமையாளர் மூலதனத்தைப் பெற்றுக்கொண்ட விதமும் அவரது சந்தைப்படுத்தல் கொள்கையுமாகும்.
(4) வணிகத்தின் சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் விதமாகும்.

**25.** உற்பத்தித் திட்டத்தைத் தயாரிப்பதன் பிரதான நோக்கமானது, எதிர்பார்க்கப்படும்
(1) மொத்த உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பிடுதலாகும்.
(2) மொத்த பொருட் கிரயத்தைக் கணிப்பிடுதலாகும்.
(3) மொத்த கேள்விக் கிரயத்தைக் கணிப்பிடுதலாகும்.
(4) மொத்த சந்தைப்படுத்தல் கிரயத்தைக் கணிப்பிடுதலாகும்.

**26.** பொருட்களைப் பொதியிடலுக்காகப் பயன்படுத்தப்படும் மின்சாரம்
(1) நேர் மூலப்பொருட் கிரயமாகும். (2) நேரில் மூலப்பொருட் கிரயமாகும்.
(3) ஏனைய உற்பத்திக் கிரயமாகும். (4) ஏனைய மூலப்பொருட் கிரயமாகும்.

**27.** தனது வியாபாரப் பெயரைப் பயன்படுத்தி பொருள் அல்லது சேவையினைச் சந்தைப்படுத்துவதற்கு வேறு ஒரு பிரிவினருக்கு அனுமதியினை வழங்கும் தரப்பினர்
(1) உற்பத்தியாளர் எனப்படுவர். (2) வழங்குனர் எனப்படுவர்.
(3) முகாமையாளர் எனப்படுவர். (4) அங்கீகாரம் வழங்குவோர் எனப்படுவர்.

**28.** தற்காலத்தில் வங்கிக் கணக்கொன்றில் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தகவல்களை செல்லிடத் தொலைப்பேசி ஊடாக அறிந்துகொள்வதற்காக வழங்கப்பட்டுள்ள சேவையானது
(1) புதிய கண்டுபிடிப்பாகும். (2) விரிவாக்கமாகும்.
(3) பின்பற்றுதலாகும். (4) கலவையாகும்.

**29.** நாட்டில் முயற்சியாண்மைக் கலாசாரத்தை உருவாக்குவதற்குத் தடையாகவுள்ள சமூகக்காரணி
(1) இலாபம் ஈட்டும் நோக்கம்
(2) தனியாள் மனப்பாங்கு
(3) மக்களின் அதியுயர் கல்வித் தகைமை
(4) சம்பளம் பெறும் தொழிலுக்கு வழங்கப்படும் உயர் அங்கீகாரம்

**30.** வணிகத் திட்டமிடலுடன் தொடர்பான இரண்டு கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.
A - வணிகத் திட்டமொன்றின் மூலம் அகச்சூழல், புறச் சூழல் நிலைமைகளை உறுதியாக எதிர்வுகூறலாம்.
B - மொத்த முதலீட்டுக் கிரயத்தைக் கணிப்பிடும்போது வணிகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னரான செலவு கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.
மேற்குறித்த கூற்றுகள் தொடர்பில் சரியான விடை யாது?
(1) A யும் B யும் சரியானவை. (2) A யும் B யும் தவறானவை.
(3) A சரியானது; B தவறானது. (4) A தவறானது; B சரியானது.

**31.** ABC தனியார் கம்பனி ‘திகழ்’ எனும் பெயரில் பற்பசை ஒன்றினைத் தயாரிப்பதுடன் அதற்குச் சமமான பல்வேறு பற்பசை உற்பத்திகளும் சந்தையில் விற்பனைக்கு உள்ளன. இதனால் வலியுறுத்தப்படுவது
(1) போட்டித்தன்மை (2) சந்தைக் கட்டமைப்பு
(3) உற்பத்தி மேம்படுத்தல் (4) உற்பத்தித் திறன்

**32.** பெண்களுக்கான விசேட முகப்பூச்சுகளை உற்பத்தி செய்யும் வரையறுக்கப்பட்ட ‘பியூட்டி’ தனியார் கம்பனியின் பணிப்பாளர் தனது நிறுவனம் தொடர்பில் தொலைக்காட்சி கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றார். இது
(1) மேம்படுத்தல் உபாயம் எனப்படும். (2) உற்பத்தி உபாயம் எனப்படும்.
(3) சந்தைசார் உபாயம் எனப்படும். (4) உற்பத்தி அபிவிருத்தி உபாயம் எனப்படும்.

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**33.** புதிய வணிகமொன்றிற்குரிய மிகவும் வெற்றிகரமான பிரவேச உபாய மார்க்கமாக அமைவது
(1) போட்டியாளரொருவரின் உற்பத்திப் பொருளொன்றை அதேவிதமாக முன்வைத்தல்
(2) போட்டியாளரொருவரின் உற்பத்திப் பொருளுக்கான பதிலீடொன்றை முன்வைத்தல்
(3) இறக்குமதிப் பொருளொன்றை முன்வைத்தல்
(4) புத்தாக்கத்தின் ஊடாக புதிய உற்பத்திப் பொருளொன்றை முன்வைத்தல்

**34.** வணிகமொன்றின் உரிமையாளரின் விருப்பத்திற்கிணங்க ஊழியர்களைப் பணியிலமர்த்தல், வணிக நடவடிக்கைகளை விரிவாக்கல், பொருட்களின் விலைகளைத் தீர்மானித்தல் ஆகிய செயற்பாட்டுத் தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய வணிக அமைப்பு வகை
(1) தனியார் கம்பனியாகும். (2) பங்குடைமையாகும்.
(3) இலாப நோக்கற்ற வணிகமாகும். (4) தனியுடைமை வணிகமாகும்.

**35.** ரங்கன் கல்லுடைக்கும் வணிகமொன்றை ஆரம்பிக்க எண்ணியுள்ளார். அவர் அதற்கான அனுமதி பெறவேண்டிய நிறுவனம் எது?
(1) இலங்கை மத்திய சூழல் அதிகாரசபை (2) இலங்கை கட்டளைகள் நிறுவனம்
(3) கைத்தொழில் அபிவிருத்திச் சபை (4) கைத்தொழில் தொழினுட்ப நிறுவனம்

**36.** சிறந்த வியாபார எண்ணமொன்றின் பண்பு
(1) நட்ட இடரை ஏற்கக்கூடியதாய் இருத்தல்
(2) உடனடியாக இலாபமீட்டக்கூடியதாய் இருத்தல்
(3) மாற்றமடையும் தேவைகள், விருப்பங்களுக்குப் பிரதிபலிப்பை வெளிப்படுத்தக்கூடியதாய் இருத்தல்
(4) சமூக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாயிருத்தல்

**37.** வணிகமொன்றிற்கு வழங்கப்படும் நிதிசாரா ஊக்குவிப்பாக அமைவது
(1) சலுகை வட்டி வீதத்தில் கடன் வசதிகளை வழங்குதல்
(2) உயர் இலாபம் ஈட்டத்தக்கவாறு வணிகத் திட்டங்களைத் தயாரித்தல்
(3) கடனை மீளச்செலுத்த வேண்டிய கால எல்லையை அதிகரித்தல்
(4) பிணையின்றிய கடன்களை வழங்குதல்

**38.** வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றைப் பதிவு செய்ததன் பின்னர் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்படும் ஆவணம்
(1) சங்கத்தின் யாப்பு (2) கூட்டிணைப்புச் சான்றிதழ்
(3) சங்க அமைப்பு விதிக்குறிப்பு (4) வியாபார பெயர் பதிவுச்சான்றிதழ்

**39.** வணிக உலகில் காணப்படும் பொருட்களின் தன்மை மாற்றமடைந்து புதிய பொருட்கள் சந்தையில் அதிகரித்துள்ளமைக்கான காரணம்
(1) விருப்பங்கள் வேகமாக மாற்றமடைதலாகும்.
(2) சூழல் வேகமாக மாற்றமடைதலாகும்.
(3) தேவைகள் வேகமாக மாற்றமடைதலாகும்.
(4) வணிக நிறுவனங்கள் வேகமாக மாற்றமடைதலாகும்.

**40.** நகரமொன்றிலுள்ள பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை 75 000 ஆகும். அவர்களில் 50 000 பேர் புத்தகப்பைகளைப் பயன்படுத்துவதாகக் கருதப்படுகின்றது. இப் புத்தகப்பைகளில் 60 % ஆனவை பாடசாலை ஊடாகவும் 10 % ஆனவை போட்டி நிறுவனங்கள் ஊடாகவும் வழங்கப்படுகின்றன. இங்கு காணப்படும் சந்தை இடைவெளி
(1) 12 500 ஆகும். (2) 15 000 ஆகும்.
(3) 20 000 ஆகும். (4) 30 000 ஆகும்.

* *

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**63 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2019**

ව්‍යවසායකත්ව අධ්‍යයනය **I, II**
**முயற்சியாண்மைக் கற்கை** **I, II**
Entrepreneurship Studies **I, II**

## முயற்சியாண்மைக் கற்கை II

※ **முதலாம்** வினா உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**1.** பின்வரும் சம்பவத்தைக் கவனமாக வாசித்து, (i) தொடக்கம் (x) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

பாலேந்திரன் அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தின் நிரந்தர ஊழியராவார். அவரது சேவைக்காலம் 20 வருடங்கள் ஆகும். பாலேந்திரன் அரசசேவையில் இருந்து விலகி தனது சொந்த அச்சகமொன்றை நடாத்தத் தீர்மானித்தார். இதற்கான மூலதனமாக, அவர் சேமித்து வைத்திருந்த ரூ. 1500 000 பணத்தையும் 10% வருடாந்த வட்டிக்கு வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ள ரூ. 1000 000 இனையும் முதலீடு செய்யத் தீர்மானித்துள்ளார். அவர் அதற்கான வணிகத்திட்டத்தினைத் தயாரித்து, வங்கிக்குச் சமர்ப்பித்த போதிலும், அதன் நிதித் திட்டத்தில் உள்ளடக்கிய தகவல்கள் போதாதெனக் குறிப்பிட்டு, வங்கி அவரது கடன் விண்ணப்பத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்தது. பின்னர் வணிக ஆலோசகர் ஒருவரது உதவியுடன் உரிய சரியான தகவல்களை உள்ளடக்கித் தயாரித்த நிதித்திட்டத்தை மீண்டும் சமர்ப்பித்த பின்னர் கடனைப் பெற்றுக்கொள்வதற்கான அனுமதியளிக்கப்பட்டது. பாலேந்திரன் தனது புதிய வணிகத்திற்கு அனுபவமுள்ள ஊழியர்கள் ஐவரைப் பணிக்கமர்த்தவும் தீர்மானித்துள்ளார்.

(i) அரச உத்தியோகத்தில் ஈடுபடல், தனது சொந்த வணிகமொன்றை நடாத்துதல் ஆகியவற்றின் மூலம் பாலேந்திரனுக்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலம், பிரதிகூலம் **ஒவ்வொன்றைத்** தனித்தனியே குறிப்பிடுக.

(ii) பாலேந்திரனின் வணிகத்துடன் தொடர்புடைய வணிக வாய்ப்புக்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(iii) வணிகத் திட்டமொன்றைத் தயாரிப்பதன் மூலம் பாலேந்திரன் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(iv) பாலேந்திரனால் சமர்ப்பிக்கப்பட்ட நிதித்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய முக்கிய பகுதிகள் யாவை?

(v) மேற்குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய வணிகத்தின்மீது அக்கறை செலுத்தும் **இரண்டு** தரப்பினரைப் பெயரிடுக.

- மேற்குறித்த சம்பவம் தொடர்பில் பாலேந்திரன் வணிகத்தின் எதிர்வரும் ஆண்டிற்குரிய தகவல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

| உருப்படி | பெறுமதி (ரூ.) |
|---|---|
| விற்பனை வருமானம் | 2 000 000 |
| இயந்திரக் கொள்வனவு | 1 500 000 |
| காரியாலய தளபாடக் கொள்வனவு | 40 000 |
| மூலப்பொருட் கிரயம் | 800 000 |
| கூலிக் கிரயம் | 200 000 |
| நிர்வாகச் செலவு | 60 000 |
| விற்பனைச் செலவு | 55 000 |
| நிதிச் செலவு (வங்கிக் கடன் வட்டி உள்ளடங்கலாக) | 15 000 |

[பக். 7 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

- மேற்குறித்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பாலேந்திரன் வணிகத்துடன் தொடர்புடைய பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.
  - (vi) மதிப்பிடப்பட்ட மொத்த முதலீடு
  - (vii) மதிப்பிடப்பட்ட மொத்த காசு உட்பாய்ச்சல்
  - (viii) மதிப்பிடப்பட்ட மொத்த காசு வெளிப்பாய்ச்சல்
  - (ix) மதிப்பிடப்பட்ட மொத்த நிலையான சொத்துக்களின் பெறுமதி
  - (x) எதிர்பார்க்கப்படும் தேறிய இலாபம்

(02 × 10 = 20 புள்ளிகள்)

2. (i) 'முயற்சியாண்மை' என்பதனை வணிகக் கண்ணோட்டத்தில் விளக்குக.
   (ii) உற்பத்திக் காரணிகளில் முயற்சியாண்மையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுக.
   (iii) நடைமுறையில் காணக்கூடிய புத்தாக்கத்திற்கான உதாரணங்கள் **நான்கினை** எழுதுக.
   (iv) முயற்சியாளரின் இயல்புகளில் ஒன்றான 'நெகிழ்வுத்தன்மை' என்பது யாது?
   (v) குமரன் புதிய வணிகமொன்றை ஆரம்பிக்க எண்ணியுள்ளார். அவர் பின்பற்றக்கூடிய வெற்றிகரமான பிரவேச உபாயங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

3. (i) வணிக நிறுவனமொன்றினால் நிறைவேற்றப்படும் **இரண்டு** செயற்பாடுகளைக் குறிப்பிடுக.
   (ii) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகள் இலங்கை முயற்சியாளர்களிடையே பிரபல்யமடைய ஏதுவான காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
   (iii) நடைமுறையில் பெரும்பாலான சிற்றளவு வணிகங்கள் பல்வேறு காரணங்களினால் தோல்வியுறுகின்றன. சிற்றளவு வணிகங்களை வெற்றிபெறச் செய்வதற்கு பின்பற்றத்தக்க நடவடிக்கைகள் **நான்கினைப்** பிரேரிக்குக.
   (iv) அமலன் வெற்றிகரமானதொரு முயற்சியாளராவார். வணிக நடவடிக்கைகள் தொடர்பாக ஒரு முயற்சியாளராக அவரது வகிபாகங்கள் **இரண்டைக்** குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றிற்கும் **ஒவ்வோர்** உதாரணம் தருக.
   (v) சிற்றளவு வணிகங்களுக்கும் முயற்சியாண்மைக்கும் இடையிலான தொடர்பை விளக்குக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

4. (i) இலங்கைப் பொருளாதாரத்தில் காணப்படும் முயற்சியாண்மை வணிக நிறுவனங்கள் பிரதான மூன்று துறைகளின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன. அவற்றுள் **இரண்டைப்** பெயரிட்டு, ஒவ்வொன்றிற்கும் **ஒவ்வோர்** உதாரணம் தருக.
   (ii) இலங்கைப் பொருளாதாரத்தில் முயற்சியாளர்களினால் பயன்படுத்தக்கூடிய வளங்களை வகைப்படுத்தக்கூடிய பிரதான **இரண்டு** முறைகளைக் குறிப்பிட்டு, அவற்றைச் சுருக்கமாக விளக்குக.
   (iii) சூழற் போக்குகள் தொடர்பில் கவனம் செலுத்துவதன் மூலம் முயற்சியாளரினால் பெற்றுக்கொள்ளக்கூடிய பயன்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.
   (iv) இலாப நோக்கற்ற வணிக அமைப்பான 'அரச வைத்தியசாலையை' உதாரணமாகக் கொண்டு, அதன் பலம், பலவீனம், வாய்ப்பு, சவால் ஆகியன **ஒவ்வொன்று** வீதம் குறிப்பிடுக.
   (v) பொருளாதாரச் சூழலை ஆய்வு செய்வதன் மூலம் முயற்சியாளரொருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய தகவல்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

5. (i) முயற்சியாளர் ஒருவர் சந்தையில் விற்பனை செய்வதற்காக உற்பத்திகளை முன்வைக்கக்கூடிய முறைகள் **இரண்டை** எழுதுக.
   (ii) சந்தை ஆய்வு மூலம் முயற்சியாளர் பெற்றுக்கொள்ளக்கூடிய தகவல்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.
   (iii) இலக்கு வாடிக்கையாளர் குழுவை இனங்கண்டுகொள்வதற்குப் பயன்படுத்தக்கூடிய நியதிகள் **நான்கினை** எழுதுக.
   (iv) அப்பியாசக் கொப்பிகளை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் உள்ளீட்டு வகைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.
   (v) இலங்கையில் முயற்சியாண்மைக் கலாசாரத்தை உருவாக்குவதற்காகப் பயன்படுத்தக்கூடிய நிதிசார் ஊக்குவிப்புகளுக்கு **இரண்டு** உதாரணங்கள் தருக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

**6.** (i) நிறைவேற்றுச் சுருக்கத்தில் உள்ளடங்கும் விடயங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(ii) வணிகமொன்றிற்காகத் தயாரிக்கப்படும் நிர்வாகத் திட்டத்தின் தேவைப்பாட்டினை விளக்குக.

(iii) முயற்சியாளரொருவர் தனது பொருளை அல்லது சேவையை உரிய வாடிக்கையாளருக்கு வழங்குவதற்காகப் பின்பற்றக்கூடிய பொருத்தமான தந்திரோபாயங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(iv) வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னரான செலவுகளுக்கு **நான்கு** உதாரணங்களைக் குறிப்பிடுக.

(v) வணிகமொன்றை நடாத்திச் செல்லும்போது நிறைவேற்ற வேண்டிய சட்டப்பொறுப்புக்கள் **இரண்டினை** எழுதுக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

**7.** மிதுலா வணிகத்தின் மாதமொன்றிற்கான உத்தேச வருமானங்கள், செலவுகளின் விவரம் பின்வருமாறு:

| **உருப்படி** | **பெறுமதி (ரு)** |
|---|---|
| விற்பனை வருமானம் | 250 000 |
| மூலப்பொருட் கிரயம் | 90 000 |
| கூலிக் கிரயம் | 30 000 |
| ஏனைய உற்பத்திக் கிரயம் | 10 000 |
| விற்பனை விநியோகச் செலவுகள் | 35 000 |
| நிர்வாகச் செலவுகள் | 40 000 |
| நிதிச் செலவுகள் | 5 000 |

**வேண்டப்படுவது:**

மிதுலா வணிகத்தின் முதல் மாதத்திற்கான உத்தேச பெறுபேற்றினைக் கணிப்பிடுவதற்கான அட்டவணையைத் தயாரித்து, **மொத்த உற்பத்திக் கிரயம், மொத்த உற்பத்தியல்லாக் கிரயம், தேறிய இலாபம்** ஆகியவற்றை எடுத்துக்காட்டுதல் (10 புள்ளிகள்)

* * *

Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka